**சுருக்கம்**

ஆதிதிராவிடர் நலம் – கல்வி – விடுதிகள் – 2011–2012 ஆம் ஆண்டு–புதிய அறிவிப்புகள்– ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கல்லூரி விடுதிகள் மற்றும் பள்ளி விடுதிகளில் மாணவ/மாணவியரின் எண்ணிக்கையில் 1500 இடங்களை உயர்த்துவதற்கு அனுமதி வழங்கி– ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை

அரசாணை(நிலை) எண்.113 நாள்.11.11.2011
திருவள்ளுவர் ஆண்டு 2042, ஐப்பசி 25.
படிக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித ந.க.எண்.த1/18670/2011 நாள்.25.08.11.

ஆணை:–

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கை எண்.4 சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டபோது மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களால் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"விடுதிகளில் தங்கிப்பயில தகுதிவாய்ந்த ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர் அதிக அளவில் விண்ணப்பித்துள்ளனர். எனவே, அவர்களது தேவையினை கருத்திற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2011–2012ஆம் கல்வி ஆண்டில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நல விடுதிகளில் மாணவ/மாணவியர்க்கு கூடுதலாக 1500 இருக்கைகள் ஏற்படுத்தப்படும்".

2. இவ்வறிவிப்பு தொடர்பாக ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையில், 2011–2012ம் ஆண்டில் ஆதிதிராவிடர் நல விடுதிகளில், மாவட்ட தேவைகளின் அடிப்படையில் பரிசீலித்து கல்லூரி / பள்ளி விடுதிகளில் விண்ணப்பித்து இடமின்றி காத்திருக்கும் ஆதிதிராவிடர் நல மாணவ/மாணவியர்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு 1500 இடங்களை கூடுதலாக மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்க ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அதிகாரம் வழங்கி ஆணையிடுமாறும் இதில் தேவைகளின் அடிப்படையில் ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதிகளுக்கு 800 இடங்களும், பள்ளி விடுதிகளுக்கு 700 இடங்களும் ஆக மொத்தம் 1500 இடங்களை பிரித்து வழங்க அனுமதி வழங்கிடுமாறும் 1500 மாணவ/மாணவியர்களை விடுதிகளில் கூடுதலாக சேர்ப்பதினால் 2011–2012 ம் ஆண்டில் அரசுக்கு கூடுதலாக தொடரும் மற்றும் தொடரா செலவினமாக மொத்தம் ரூ.1,46,25,000/–ஏற்படும் என்றும் அத்தொகையினை 2011–2012ம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்து ஆணையிடுமாறும் ஆதிதிராவிடர் நல ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. ஆதிதிராவிடர் நல ஆணையரின் செயற்குறிப்பு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு 2011-2012ம் ஆண்டில் ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதிகள் மற்றும் பள்ளி விடுதிகளில் 1500 மாணவ/மாணவியர்களை கூடுதலாக சேர்த்துக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்தும், இதில் 800 மாணவ/மாணவியர்களை கல்லூரி விடுதிகளிலும், 700 மாணவ/மாணவியர்களை பள்ளி விடுதிகளிலும், நிலுவை விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் தேவைகளின் அடிப்படையில் மாவட்டங்களுக்கு பிரித்து வழங்கவும் ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அதிகாரம் அளித்தும் இதற்காக தொடரும் செலவினமாக ரூ.1,15,19,000/-ம் மற்றும் தொடரா செலவினமாக ரூ.3,15,000/-ம், ஆக மொத்தம் ரூ.1,18,34,000/-(ஒரு கோடியே பதினெட்டு இலட்சத்து முப்பத்துநான்கு ஆயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2225-ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 01 ஆதிதிராவிடர் நலன்- 277-கல்வி -I திட்டத்தில் சேராதது - AE- மாணவர் இல்லங்கள்.

| | |
|---|---|
| 24 பொருள்களும் வழங்கலும்<br>(த.தொ.கு.2225-01-277-AE-2401) | ரூ. 25,500/- |
| 4600 உடைகள், கூடாரச் செலவுகள் பண்டகசாலைப் பொருள்கள்<br>(த.தொ.கு.2225-01-277-AE-4605) | ரூ. 1,53,000/- |
| 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள்<br>09 ஏனையவை<br>(த.தொ.கு.2225-01-277-AE-6792) | ரூ.58,85,250/- |
| 99 பல்வகை<br>(த.தொ.கு.2225-01-277-AE-9904) | ரூ.5,12,500/- |
| மொத்தம் | ரூ.65,76,250/- |

2225 –ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –01 ஆதிதிராவிடர் நலன் – 277–கல்வி– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம்–KD- மாணவரில்லங்கள்.

| | |
|---|---|
| 24.பொருள்களும் வழங்கலும்<br>(து.தொ.கு.2225–01–277–KD-2403) | ரூ.16,500/– |
| 4600 உடைகள், கூடாரச் செலவுகள்<br>பண்டகசாலைப் பொருள்கள்<br>(து.தொ.கு.2225–01–277–KD-4607) | ரூ. 99,000/– |
| 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள்<br>09 ஏனையவை<br>(து.தொ.கு.2225–01–277–KD-6794) | ரூ.39,32,250/– |
| 9900 பல்வகை<br>(து.தொ.கு.2225–01–277–KD-9906) | ரூ.3,62,500/– |
| மொத்தம் | ரூ.44,10,250/– |

2225 –ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 277–கல்வி– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II மாநிலத் திட்டம்–KE- ஆதிதிராவிடர் நல பட்டமேற்படிப்பு மாணவர் இல்லத்தைத் தொடங்குதல்.

| | |
|---|---|
| 24 பொருள்களும் வழங்கலும்<br>(து.தொ.கு.2225–01–277–KE-2401) | ரூ. 3,000/– |
| 46 உடைகள், கூடாரச் செலவுகள்<br>பண்டகசாலைப் பொருள்கள்<br>(து.தொ.கு.2225–01–277–KE-4605) | ரூ. 18,000/– |
| 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள்<br>09 ஏனையவை<br>(து.தொ.கு.2225–01–277–KE-6792) | ரூ.7,51,500/– |
| 99 பல்வகை<br>(து.தொ.கு.2225–01–277–KE -9904) | ரூ.75,000/– |
| மொத்தம் | ரூ.8,47,500/– |

5. மேலே பத்தி3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. இது ஒரு "புது துணைப்பணி" குறித்த செலவினமாகும் நாளடைவில் இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு செலவு-I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான தொகைக்கு விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் நிதி (வரவு செலவு-I) துறைக்கு அனுப்பிவைக்கும்படி ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையில் அ.சா.கு71/DS(VS)/11 நாள்.11.11.2011 இசைவினைப் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப்பேரேடு எண்.835(எண்ணூற்று முப்பத்தைந்து).

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. சு. ஜீவரத்தினம்
அரசு செயலாளர்.

பெறுநர்

ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-5.
இயக்குநர் பழங்குடியினர் நலம், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/35/6. (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.

நகல்:-

நிதி(பி.மி.பி/ஆதி(ம)பந) துறை, சென்னை-9.
நிதி (வரவு செலவு பொது I) (வரவு செலவு பொது II)துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் நலத்துறை செயலரின் தனிச் செயலர்,சென்னை-9.
நிதித்(BPE) துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் அனைத்து பிரிவுகள், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.